# March 20, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. உக்ரைனுக்கு நிதியுதவி வழங்குவதைத் தடுப்பதாகக் குற்றஞ்சாட்டி ஹங்கேரி அதிபர் விக்டர் ஆர்பனுக்கு ஐரோப்பிய யூனியன் கண்டனம் தெரிவித்தது.

(i) ரஷியாவுடன் 4 ஆண்டுகளுக்கு மேலாக போரில் உக்ரைன் ஈடுபட்டு வருகிறது. இந்நிலையில், உக்ரைன் பாதுகாப்புப் படைகளுக்கு அடுத்த 2 ஆண்டுகளுக்கு நிதியுதவி வழங்க 27 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய யூனியன் கடந்த டிசம்பரில் முடிவெடுத்தது.

(ii) இதில் உறுப்பினராக உள்ள ஹங்கேரியும் ஐரோப்பிய யூனியன் முடிவுக்கு முன்பு சம்மதம் தெரிவித்தது. ஆனால் தற்போது உக்ரைனுக்கு நிதியுதவி வழங்குவதை அந்நாட்டு அதிபர் விக்டர் ஆர்பன் தடுப்பதாக அந்த யூனியன் குற்றஞ் சாட்டியுள்ளது.

(iii) ஹங்கேரி மற்றும் ஸ்லோவோகியாவுக்கு ரஷியாவில் இருந்து உக்ரைன் பிராந்தியம் வழியாக கச்சா எண்ணெய் விநியோகிக்கப்படும் ட்ருஸ்பா குழாயில் கடந்த ஜனவரி மாதம் சேதம் ஏற்பட்டது. இதனால் ஹங்கேரிக்கான கச்சா எண்ணெய் விநியோகம் தடைபட்டது. ட்ருஸ்பா குழாயில் ரஷிய ட்ரோன்கள் தாக்குதல் நடத்தியதே இதற்குக் காரணம் என உக்ரைன் குற்றஞ்சாட்டியது. ஆனால், ஹங்கேரிக்கு விநியோகிக்கப்படும் ரஷிய கச்சா எண்ணெய்யை தடுப்பதே உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கியின் திட்டம் என விக்டர் ஆர்பன் குற்றஞ்சாட்டினார். இதைத் தொடர்ந்து உக்ரைன் பாதுகாப்புப் படைகளுக்கு ஐரோப்பிய யூனியன் நிதியுதவி வழங்க அவர் எதிர்ப்பு தெரிவித்தார்.

(iv) ஹங்கேரி நாட்டில் வரும் ஏப்.12-ஆம் தேதி பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், ஸெலென்ஸ்கியை ஹங்கேரிக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துபவர் என்ற பிரசாரத்தை விக்டர் ஆர்பன் முன்னெடுத்துள்ளார்.

(v) விக்டர் ஆர்பனின் செயல்பாடுகளுக்கு கண்டனம் தெரிவித்த ஃபின்லாந்து பிரதமர் பெட்டேரி ஓர்போ மற்றும் ஆஸ்திரிய பிரதமர் கிறிஸ்டியன் ஸ்டாக்கர், 'உக்ரைனில் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டு வரும் சூழலில் தேர்தலில் மீண்டும் வெற்றிபெற ஏற்கெனவே ஒப்புக்கொண்ட நிதியுதவித் திட்டத்தை விக்டர் ஆர்பன் தடுக்க முயற்சிக்கிறார். அதை ஏற்கமுடியாது' என விமர்சித்தனர்.

2. நாட்டின் மிகப்பெரிய தனியார் துறை வங்கியான எச்டிஎஃப்சி வங்கியின் நிர்வாகம் சாராத, பகுதிநேர தலைவரான அதானு சக்ரவர்த்தி தனது பதவியை திடீரென ராஜிநாமா செய்துள்ளார்.

(i) கடந்த 2021, மே மாதம் இப்பொறுப்பை ஏற்ற அவர், தனது பணிக்காலம் முடிவடைவதற்கு முன்பே நெறிமுறை முரண்களை முன்னிறுத்தி விலகியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இவரது ராஜிநாமாவைத் தொடர்ந்து, இடைக்கால தலைவராக கேகி மிஸ்திரி நியமிக்கப்பட்டுள்ளார்.

(ii) பதவி விலகல் குறித்து வங்கியின் இயக்குநர்கள் குழுவுக்கு கடிதம் எழுதியுள்ள அதானு சக்ரவர்த்தி, கடந்த 2 ஆண்டுகளில் வங்கியில் நடந்த சில நிகழ்வுகளும்; நடைமுறைகளும் தனது தனிப்பட்ட விழுமியங்களுக்கும், தார்மீக நெறிமுறைகளுக்கும் முரணாக இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

(iii) கொள்கை ரீதியான இந்த மாறுபாடுகளே தனது முடிவுக்குக் காரணம் என்றும், வங்கி செயல்பாடுகள் தொடர்பாக வேறு எந்த உள்நோக்கமும் இதில் இல்லை என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

3. உலக உள்ளரங்கு தடகள சாம்பியன்ஷிப்பை இந்தியா முதல் முறையாக 2028-ஆம் ஆண்டு புவனேசுவரத்தில் நடத்தவுள்ளது.

4. கால்பந்து கேரியரில் அதிவேகமாக 900 கோல்களை எட்டியவராக ஆர்ஜென்டீன கால்பந்து நட்சத்திரம் லயனல் மெஸ்ஸி சாதனை படைத்தார். அவர் 1,142 ஆட்டங்களில் 900 கோல்களை

அடித்திருக்கிறார். போர்ச்சுகல் நட்சத்திரம் கிறிஸ்டியானோ ரொனால்டோ 1,236 ஆட்டங்களில் அந்த மைல்கல்லை தொட்டது நினை வுகூரத்தக்கது.

5. ஆப்பிரிக்க நாடுகள் கோப்பை (ஆஃப்கான்) கால்பந்து போட்டியின் சாம்பியன் பட்டம் தங்களிடம் இருந்து பறிக்கப்பட்டு, மொராக்கோ அணிக்கு வழங்கப்பட்டதற்கு எதிராக செனகல் அணி, விளையாட்டுகளுக்கான சர்வதேச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்போவதாகத் தெரிவித்துள்ளது.

(i) ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த கால்பந்து அணிகள் இடையே, இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் போட்டியாக ஆஃப்கான்' உள்ளது. அந்த வகையில் 35-ஆவது ஆண்டு ஆஃப்கான் போட்டி கடந்த டிசம்பரில் தொடங்கி ஜனவரியில் நிறைவடைந்தது.

(ii) ஜனவரி 18-ஆம் தேதி நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் செனகல் 1-0 கோல் கணக்கில் மொராக்கோவை வீழ்த்தி சாம்பியன் ஆனது. அந்த அணிக்கு கோப்பையும் வழங்கப்பட்டது.

(iii) எனினும், இறுதி ஆட்டத்தின் போது நிகழ்ந்த பெனால்ட்டி கிக் சர்ச்சை தொடர்பாக விசாரித்து வந்த ஆப்பிரிக்க கால்பந்து கூட்டமைப்பின் மேல்முறையீட்டுக் குழு, செனகலுக்கு வழங்கப்பட்ட சாம்பியன் பட்டம் பறிக்கப்படுவதாகவும், வெற்றிக் கோப்பை மொராக்கோவுக்கு அளிக்கப்படுவதாகவும் அறிவித்தது.

(iv) இந்நிலையில் அந்த முடிவுக்கு எதிராக, சுவிட்ஸர்லாந்தில் உள்ள விளையாட்டுகளுக்கான சர்வதேச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்போவதாக செனகல் தெரிவித்துள்ளது.

6. இரண்டு அல்லது மூன்று குழந்தைகளைப் பெற்றுள்ள குடும்பத்துக்கு ரூ.25,000 ஊக்கத்தொகை உள்ளிட்ட மக்கள்தொகையை அதிகரிப்பதற்கான பல்வேறு புதிய அம்சங்களுடன் கூடிய மாநில மக்கள்தொகை மேலாண்மை கொள்கையை தெலுங்கு புத்தாண்டான யுகாதி நாளில் ஆந்திர முதல்வர் என். சந்திரபாபு நாயுடு அறிவித்தார்.

(i) முதியவர்களுக்கான சிறந்த பராமரிப்பை உறுதிப்படுத்தவும், சமூக நிலைத்தன்மையை விரிவுபடுத்தும் வகையிலும் கூட்டுக் குடும்ப முறைக்குப் புத்துயிர் கொடுப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக முதல்வர் அப்போது கூறினார்.

(ii) ஆந்திர மாநிலம் விஜயவாடா வில் அரசு சார்பில் நடத்தப்பட்ட யுகாதி விழாவில் பேசும்போது இந்த அறிவிப்பை முதல்வர் சந்திரபாபு நாயுடு வெளியிட்டார். அப்போது அவர் பேசியதாவது:

- பிறப்பு விகிதம் குறைந்து வருவதும், வயது முதிந்தவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதும் உலக அளவிலான தீவிர பிரச்னையாக உருவெடுத்து வருகிறது. இந்தப்போக்கு, தற்போது தென் இந்தியாவிலும் தற்போது தொடங்கியுள்ளது.
- இளம் மக்கள்தொகை எண்ணிக்கை இவ்வாறு தொடர்ந்து குறைந்து வருவது, வரும் காலங்களில் பணியிடங்களில் மனிதப் பங்கேற்பு குறைந்து, இயந்திரங்கள் மற்றும் தானியங்கிகளின் ஆதிக்கத்துக்கு வழிவகுத்துவிடும்.

7. உலகின் மகிழ்ச்சிகரமான நாடுகளின் பட்டியலில் இந்தியா 116-ஆவது இடத்தை பிடித்துள்ளது. கடந்த ஆண்டு 118- ஆவது இடத்தில் இருந்த இந்தியா இப்போது 116-ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

(i) இந்த தரவரிசையின்படி, தனது அண்டை நாடுகளை விட இந்தியா பின்தங்கியுள்ளது.

(ii) சர்வதேச மகிழ்ச்சி தினம் மார்ச் 20 கொண்டாடப்படுவதை முன்னிட்டு, நிகழாண்டுக்கான மகிழ்ச்சிகரமான நாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்டது.

(iii) அமெரிக்காவின் கேலப் ஆய்வு நிறுவனம் மற்றும் ஐ.நா.வின் நிலையான வளர்ச்சி தீர்வுகள் அமைப்புடன் இணைந்து பிரிட்டனின் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழக நல்வாழ்வு ஆய்வு மையம் இந்தப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

(iv) முதலிடத்தில் பின்லாந்து :

- தனிநபர் சராசரி உற்பத்தி, சுதந்திரம், நன்கொடைகள், ஆரோக்கியமான ஆயுட்காலம், ஊழலற்ற நிர்வாகம் என பல்வேறு காரணிகளின் அடிப்படையில் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட இந்த தரவரிசை பட்டியலில் தொடர்ந்து 9-ஆவது ஆண்டாக முதலிடத்தை தக்கவைத்துள்ளது பின்லாந்து.
- 2 முதல் 10 வரையிலான இடங்களில் ஐஸ்லாந்து, டென்மார்க், கோஸ்டா ரிகா, ஸ்வீடன், நார்வே, நெதர்லாந்து, இஸ்ரேல், லக்ஸம்பெர்க், ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன. அமெரிக்கா 23-ஆவது இடத்தில் உள்ளது.
- இந்தப் பட்டியலில் இந்தியா 116-ஆவது இடத்தில் உள்ளது.
- கடந்த ஆண்டு 118-ஆவது இடத்திலும், 2024-இல் 126- ஆவது இடத்திலும் இந்தியா இருந்தது.

(v) 'இந்தியர்கள் நம்பிக்கை மிக்கவர்கள்': உலகின் மகிழ்ச்சிகரமான நாடாக பின்லாந்து நீடிப்பது குறித்து இந்தியாவுக்கான அந்நாட்டின் தூதர் கிம்மோ லாடேவிர்டா கூறுகையில், 'நீண்டகால வளர்ச்சி மற்றும் சமூக நம்பிக்கையால் உலகின் மகிழ்ச்சி குறியீட்டில் பின்லாந்து தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. பின்லாந்து மகிழ்ச்சியான நாடு என்றால், இந்தியர்கள் உலகிலேயே நம்பிக்கைமிக்க மக்கள். இந்தியர்களின் நம்பிக்கையும், பின்லாந்து நாட்டவரின் மகிழ்ச்சியும் பல்வேறு வழிகளில் வெற்றிகமாக ஒன்றியணைய முடியும்' என்றார்.

(vi) உலகின் மகிழ்ச்சியற்ற நாடு ஆப்கன்:

- நமது அண்டை நாடான ஆப்கானிஸ்தான், உலகின் மகிழ்ச்சியற்ற நாடு என்ற முத்திரையுடன் பட்டியலில் தொடர்ந்து கடைசி இடத்தில் (147) உள்ளது.

8. காடுகளின் முக்கியத்துவம் :-

(i) காலவரிசை மற்றும் உலகளாவிய அங்கீகாரம்

- 1971: காடுகளின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த, மார்ச் 21-ஐ "காடுகள் தினம்" (Forest Day) ஆக அனுசரிக்க, 16-வது ஐரோப்பிய வேளாண் மாநாடு முதன்முதலில் முடிவு செய்தது.
- 2012: மார்ச் 21-ஐ ஒவ்வொரு ஆண்டும் உலகளவில் "உலக வனவியல் தினம்" (World Forestry Day) ஆக அனுசரிக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை (UN) அறிவித்தது.
- 2022: பசுமைப் பரப்பை மேம்படுத்தும் லட்சியத்துடன், 12,000 சதுர கி.மீ. பரப்பளவில் 265 கோடி மரக்கன்றுகளை நடும் "பசுமைத் தமிழ்நாடு இயக்கம்" (Green Tamil Nadu Mission) திட்டத்தை தமிழ்நாடு அரசு தொடங்கியது.
- 2024–2026: கடந்த இரண்டு ஆண்டுகளில், "பசுமைத் தமிழ்நாடு இயக்கம்" திட்டத்தின் கீழ், அதிகாரிகள் வெற்றிகரமாக 30 லட்சம் பாரம்பரிய மரக்கன்றுகளை நட்டுள்ளனர்.
- 2026 (தற்போதைய நிலை): இந்த ஆண்டின் உலக வனவியல் தினத்திற்கான மையக்கருத்து "காடுகளும் பொருளாதாரமும்" (Forests and Economy) என்பதாகும்.
- 2030 (எதிர்கால இலக்கு): "ஒரு மனிதன் – ஒரு மரம்" (One Human – One Tree) என்ற முன்னெடுப்பின் மூலம், 2030-ஆம் ஆண்டிற்குள் காடுகளின் பரப்பை கணிசமாக அதிகரிக்க, ஒரு கூட்டு உலகளாவிய முயற்சிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(ii) காடுகள் அழிவதற்கான காரணங்கள் :-

காடுகள் விரைவாக அழிந்து போவதற்குப் பல மனிதச் செயல்பாடுகள் காரணமாக அமைகின்றன:-

- உள்கட்டமைப்பு விரிவாக்கம்: சாலை மற்றும் இரயில்வே விரிவாக்கத் திட்டங்களுக்காக மரங்கள் பெருமளவில் அழிக்கப்படுகின்றன.
- நகரமயமாக்கல்: வளமான விவசாய மற்றும் வன நிலங்கள் குடியிருப்புப் பகுதிகளாக மாற்றப்படுகின்றன.
- தொழில்சார் பேராசை: மனிதர்களின் பேராசையின் காரணமாக, யானை வழித்தடங்கள்

ஆக்கிரமிக்கப்படுவதோடு, சூழலியல் ரீதியாக உணர்திறன் மிக்க மண்டலங்களில் ஓய்வு விடுதிகளும் (resorts) கட்டப்படுகின்றன.

- சுரண்டல்: வனவிலங்குகள் மற்றும் வன வளங்கள், மருந்துகள், அலங்காரப் பொருட்கள் மற்றும் சட்டவிரோத வேட்டைக்காகக் குறிவைக்கப்படுகின்றன.
- இயற்கை சீற்றங்கள்: காட்டுத் தீயானது, மரங்களின் அடர்த்தி திடீரெனவும் பெருமளவிலும் குறைந்து போவதற்கான ஒரு முக்கிய காரணமாகத் தொடர்ந்து இருந்து வருகிறது.

(iii) காடுகள் அழிவதின் விளைவுகள் :-

காடுகள் அழிந்து போவது கடுமையான சூழலியல் மற்றும் பொருளாதாரத் தாக்கங்களை ஏற்படுத்துகிறது:

- இலவச ஆக்ஸிஜன் இழப்பு: ஒரு மனிதன் தினமும் சுமார் ₹2,100 மதிப்புள்ள ஆக்ஸிஜனைச் சுவாசிக்கிறான் (இது மூன்று ஆக்ஸிஜன் சிலிண்டர்களுக்குச் சமமானது). 60 ஆண்டுகால வாழ்நாளில், மரங்கள் ஒரு மனிதனுக்கு ₹4 கோடி மதிப்புள்ள ஆக்ஸிஜனை இலவசமாக வழங்குகின்றன; அவற்றை அழிப்பதன் மூலம், வாழ்விற்கு இன்றியமையாத இந்த ஆதாரத்தை நாம் இழக்கிறோம்.
- இயற்கை சீற்றங்கள்: மண்ணைப் பற்றிக்கொள்ள மரங்களின் வேர்கள் இல்லாத நிலையில், மழைப்பொழிவு மண் அரிப்பு, நிலச்சரிவுகள் மற்றும் பேரழிவு தரும் வெள்ளப்பெருக்குகளுக்கு வழிவகுக்கிறது.
- பல்லுயிர் இழப்பு: காடுகளே விலங்குகள், பறவைகள் மற்றும் பூச்சினங்களின் முதன்மையான வாழ்விடங்களாகத் திகழ்கின்றன. காடுகள் அழிக்கப்படுவதால், எண்ணற்ற உயிரினங்கள் அழிவின் விளிம்பிற்குத் தள்ளப்படுகின்றன.
- பொருளாதார நெருக்கடி: காடுகள் அழிந்துபோகும்போது, பழங்குடியின மற்றும் கிராமப்புற மக்கள் தங்கள் முதன்மையான வாழ்வாதாரங்களை (மரம், மூலிகைகள், தேன்) இழக்க நேரிடுகிறது.

(iv) தீர்வுகள் மற்றும் வழிமுறைகள்

- 1:10 விகிதம்: சர்வதேச வனவியல் தரநிலைகளின்படி, வெட்டப்படும் ஒவ்வொரு மரத்திற்கும் ஈடாகப் பத்து மரக்கன்றுகள் நடப்பட வேண்டும்.
- தனிநபர் பங்களிப்பு: எதிர்காலத் தலைமுறையினருக்கு ஒரு பசுமையான பூமியை உறுதிசெய்யும் வகையில், ஒவ்வொரு குடிமகனும் "ஒரு மனிதன் – ஒரு மரம்" என்ற தத்துவத்தை ஏற்றுக்கொண்டு, குறைந்தது ஒரு மரத்தையாவது நட்டுப் பராமரிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.
- பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு: புதிய மரக்கன்றுகளை நடுவதோடு மட்டுமல்லாமல், வெறும் எண்ணிக்கையை மட்டும் மையமாகக் கொள்ளாமல், தற்போதுள்ள மரங்களைப் பாதுகாப்பதற்கும் பராமரிப்பதற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

(v) அரசின் நடவடிக்கைகள் மற்றும் முன்னெடுப்புகள் :-

- தேசியத் திட்டங்கள்: மத்திய அரசு "பசுமை இந்தியா இயக்கம்" (Green India Mission), தேசிய வன வளர்ச்சித் திட்டம் மற்றும் பாலைவனமாதலைத் தடுப்பதற்கான குறிப்பிட்ட உத்திகள் ஆகியவற்றைச் செயல்படுத்தி வருகிறது.
- மாநிலத் திட்டங்கள் (தமிழ்நாடு): "பசுமைத் தமிழ்நாடு இயக்கம்" தனது 265 கோடி மரக்கன்றுகள் நடும் இலக்கை எட்ட, வனத்துறை, தனியார் நிறுவனங்கள், தன்னார்வ அமைப்புகள் மற்றும் தனிப்பட்ட தன்னார்வலர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சியுடன் செயல்பட்டு வருகிறது.
- குறிப்பிட்ட உயிரினப் பாதுகாப்பு: நீலகிரி வரையாட்டிற்கான (Nilgiri Tahr) ஒரு பாதுகாப்பு மையம், கோவை மாவட்டம் காந்திபுரத்தில் தமிழ்நாடு வனத்துறையினரால் நிறுவப்பட்டுள்ளது.
- சட்டரீதியான தரநிலைகள்: இயற்கை சமநிலையைப் பேணுவதற்கு ஒரு நாட்டின் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு காடுகளாக இருக்க வேண்டும் என்ற ஐ.நா.வின் தரநிலை

மேற்கோள் காட்டப்படுகிறது; இந்த இலக்கை அடைவதற்கு அரசு தீவிரமாக முயன்று வருகிறது